**O.S. No. 25/2022** **Date: 05.08.2026**

**PW2 – நீலகண்டன்**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள வாதி எவ்வாறு தெரியும் என்றால் வாதிகள் வீட்டில் நான் வாடகை இருந்ததால் எனக்கும் அவருக்கும் பழக்கம். நான் என் பிரமாண வாக்குமூலத்தில் 2016 மார்ச்சு மாதத்திலிருந்து ஏப்ரல் மாதத்திற்குள் பிரதிவாதி தனது தொழிலுக்காக பணம் தேவைப்பட்டதால் காலம் சென்ற சுப்பிரமணியிடம் வாரம் ஒரு முறை வந்து பணம் கடனாக பெற்று செல்லுவார். 2016ல் கடன் வாங்கிய கடனுக்காக எழுதிய கடனுறுதி சீட்டில் அனைத்து கடனுறுதி சீட்டுகளிலும் நான் சாட்சியமாக கையொப்பமாக இட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் அனைத்து கடனுறுதி சீட்டிலும் கையொப்பம் இடவில்லை என்றாலும் வாதியின் வீட்டில் நான் வாடகை இருந்ததால் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**

**O.S. No. 25/2022** **Date: 05.08.2026**

**PW1 – தேவி**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்தேன் என்றால் பிரதிவாதி எனது தகப்பனாரிடம் (சுப்பிரமணி) கடன் வாங்கி இருந்தார் அந்த கடனை வசூலிக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி என் தகப்பனாரிடம் 2016 மார்ச் 07, ஏப்ரல், மே மாதம் மொத்தமாக ரூ.28,08,000/- . 8 தவனையாக வாங்கினார். மார்ச் 08 ஆம் தேதி ரூ.1,00,000/-, 2016 ஏப்ரல் 08 ஆம் தேதி ரூ.5,00,000/- மறுபடியும் 2016 ஏப்ரல் 08ல் ரூ.3,00,000/- , 2016 ஏப்ரல் 09 ஆம் தேதி ரூ.5,00,000/- , மறுபடியும் ஏப்ரல் மாதம் ரூ.5,00,000/- , 2016 ஏப்ரல் மாதம் ரூ.3,00,000/-, 2016 ஏப்ரல் 20 ஆம் தேதி ரூ.5,00,000/-, 2016 ஏப்ரல் 20 ரூ.3,00,000/- ,2016 மே8 ரூ,.1,08,000/-. பிரதிவாதிக்கு கடனுறுதி அடிப்படையில் கடன் கொடுத்தார் என்றால் சரிதான். பிரதிவாதி 8 கடனுறுதி சீட்டுட்டில் கையொப்பம் இட்டு கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி கடனுறுதி சீட்டு யார் எழுதியாது யார் என்றால் நானும் சில கடனுறுதி சீட்டு எழுதிகொடுத்தேன் எனது அப்பாவும் சில கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்தார். எனது அப்பாவுக்கும் பிரதிவாதிக்கும் கொடுக்கல் வாங்கல் எனக்கு நேரடியாக தெரியாது என்று கூறியுள்ளேன் என்றால் எனக்கும் எங்க அப்பாவுக்கும் தெரியும். கடனாக கொடுக்கப்பட்ட பணம் வங்கியில் இருந்து எடுத்துக் கொடுக்கவில்லை அவர் சேமிப்பில் இருந்து எடுத்துக் கொடுத்தார் என்றால் சரிதான். 2019ல் கடனுறுதியில் சீட்டை பிரதிவாதிக்கு நெருக்கடி கொடுத்து அவர் வாங்கிய பணத்தை திருப்பி கொடுக்கும்படி என் அப்பா என் அண்ணன் என் தம்பி மற்றும் நான் சேர்ந்து அவரிடம்

வாங்கிய பணத்தை திருப்பி கொடுக்கும்படி வேண்டிக் கேட்டுக்கொண்டோம் ஆனால் அவர் திருப்பி கொடுக்காமல் காலம் நீட்டிக்க வேண்டி எங்களிடம் கேட்டுக்கொண்டார். ஆதலால் கால நீடிப்பு செய்ய சிறிது காலத்திற்கு நாங்கள் சம்மதித்தோம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 கடனுறுதி சீட்டு எந்த காலத்தில் எழுதி கொடுத்தது என்றால் 07.04.2016. அந்த கடனுறுதி சீட்டில் பிரதிவாதி கையொப்பம் இட்டு என்ன தேதி குறிப்பிட்டுள்ளது என்றால் 29.01.2018 என்று எனது அப்பாவை ஏமாற்றுவதற்காக பொய்யன தேதி குறிப்பிட்டுள்ளார். அந்த கடனுறுதி சீட்டில் மேல சரியான தேதி உள்ளது. என்னிடம் காட்டப்படும் கடனுறுதி சீட்டில் அதே போல பிரதிவாதி கையொப்பம் செய்து என்ன தேதி குறிப்பிட்டுள்ளார் என்றால் 19.09.2018 என்று தவறான தேதியை குறிப்பிட்டு என் தந்தை ஏமாற்றுவதற்காக இதிலும் கையொப்பம் இட்டுள்ளார் மேல சரியான தேதி உள்ளது. வா.சா.7 09.04.2016 பிரதிவாதி கையொப்பம் செய்து என்ன தேதி குறிப்பிட்டுள்ளார் என்றால் 29.01.2018 என்று குறிப்பிட்டுள்ளார் இதுவும் தவறான தேதி மேலே மிகச் சரியான தேதி உள்ளது. வா.சா.ஆ.9 20.04.2016 உள்ள கடனுறுதி சீட்டில் பிரதிவாதி கையொப்பம் செய்து என்ன தேதி குறிப்பிட்டுள்ளார் என்றால் 19.09.2018 இதுவும் தவறான தேதி குறிப்பிட்டுள்ளது. பிரதிவாதி கடனுறுதி சீட்டில் கையொப்பம் தவறான தேதியை குறிப்பிட்டுள்ளதை எனது சட்ட அறிவிப்பிலோ அல்லது தாவாவிலோ எனது பிரமண வாக்மூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பா எப்போது காலமானார் என்றால் 2021ல் காலமானார். எனது அப்பா உயிரோடு இந்த

காலத்தில் பிரதிவாதிக்கு சட்ட நடவடிடக்கை எடுத்தாரா என்றால் இல்லை. எனது தந்தை 24.05.2021 ல் காலமானார். எனது அப்பா காலமான பின்பு 8 மாதம் பிறகு தான் 10.01.2022 ல் பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அளித்தேன். 10.01.2022 நான் அனுப்பிய சட்ட அறிவிப்பை 15.02.2022 வரை வட்டி கொடுக்க வேண்டும் என்று அனுப்பினேன் என்றால் சரிதான். 15.02.2022 வரை வட்டியுடம் எனது பணத்தை திருப்பி கொடுக்க வேண்டும் என்று 14.02.2022 வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய 10.01.2022 சட்ட அறிப்பிற்கு பதில் அறிவிப்பில் 19.01.2022 பணம் எதுவும் கொடுக்க வேண்டியதில்லை என்று கூறிவிட்டார் என்றால் சரிதான். தாவாவில் நான் குறிப்பிட்டுள்ளபடி மாதம் ரூ.2,00,000/- வருமானம் எங்களுக்கு வருவதை நிறுபிக்கும் வகையில் நீதிமன்றத்தில் ஏதாவாது ஆவணம் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த கடனுக்காக பிரதிவாதி அசல் சொத்து கிரைய பத்திரத்தை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதியின் சகோதரரின் மனைவி பெயரில் உள்ள சொத்து பத்திரத்தை என்னிடத்தில் அத்தாச்சுக்கா கொடுத்தார் என்றால் சரிதான். பிரதிவாதி என் தந்தையிடம் எவ்வளவு பணம் வாங்கினார் மற்றும் எவ்வளவு கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்றாலும் நான் பிரதிவாதியை ஏமாற்றும் நோக்கத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் தவறு. இந்த வழக்கில் சொன்ன சங்கதிகள் எல்லா தவறு என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**